<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

<u>அசல் வழக்கு எண்.33/2023</u>

PW1 – திரு. செல்வம் த/பெ.மாணிக்கம் நாள். 29.07.2025

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Assistant (உதவியாளர்) திரு.அழகர்சாமி என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது தாத்தா பெயர் என்னவென்றால் அந்தோணி. 1ம்பிரதிவாதி எனது தகப்பனாரின் தாயார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மேற்படி அந்தோணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அந்தோணி 1976ம் ஆண்டு இறந்துவிட்டார். வேறு சொத்துக்கள் தொடர்பாக இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் இடையே தேவகோட்டை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தேவகோட்டை நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகள் 2015ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து தொடர்பாக பட்டா மாறுதல் மேல் முறையீடு இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. 2015ம் ஆண்டிற்கு முன்பே தேவகோட்டைநீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளின் கண்ட சொத்து சம்பந்தமாக சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரிடம் பட்டா மாறுதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தேவகோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் இவ்வழக்கின் 1ம் வாதி வேதநாயகம் அம்மாள் வழக்குச் சொத்துக்களை இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியான மைக்கேலுக்கு கிரையம் எழுதிக் கொடுத்தது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3. இவ்வழக்கின் 1ம் வாதியான வேதநாயகம் அம்மாள் தாவா சொத்தை செல்லமாளுக்கு விற்றது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன், எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரமானது 29.03.1966ம் தேதி வேதநாயகம் அம்மாள் செல்லம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் என்றால் சரியல்ல, அக்கிரையப்பத்திரத்தில் இடம் பெற்றிருக்கும் கையொப்பமானது எனது அப்பாயியின் கையொப்பம் இல்லை., ஆகையால் அதனை ரத்து செய்யக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்படி 29.03.1966ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தை நானோ எனது குடும்பத்தாரோ எனது அப்பாயியோ இதற்கு முன் பார்த்துள்ளோமா என்றால் 2012ம் ஆண்டு பார்த்துள்ளோம். மேற்படி 2012ம் ஆண்டு நாங்கள் கிரையப்பத்திரத்தை எப்படி பார்த்தோம் என்றால் நாங்கள் 2012ம் ஆண்டு மேற்படி கிரையப்பத்திரத்தை பார்க்கவில்லை ஆனால் சொத்து குறித்த விவரம் தெரிந்து கொண்டோம். மேற்படி கிரையப்பத்திரத்தை கண்ணால் பார்க்காமல் அதில் இடம் பெற்றிருக்கும் கையெழுத்து எனது அப்பாயின் உடையது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனது அப்பாயி எந்த சொத்தையும் விற்கவில்லை அதனால் அவர் கையொப்பம் இட்டிருக்க முடியாது.

5. மேற்படி என்னிடம் காட்டப்படும் 29.03.1966ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் லேட்.அந்தோணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணமானது போலி ஆவணம் ஆகும். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் அந்தோணி எத்தனை இலக்கச் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் பத்து இலக்கச் சொத்துக்கள் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பத்து இலக்கச் சொத்துக்களுக்கும் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி வா.சாஆ..1 கிரையப்பத்திரத்தில் எத்தனையாவது இலக்கச் சொத்து இவ்வழக்கின் தாவா சொத்து என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மேற்படி அந்தோணியின் இறப்பை எந்த ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு பதிவேட்டில் எந்த ஆண்டு பதிந்தோம் என்றால் எனது அப்பாயி தான் இறப்பை பதிவு செய்தார் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. சட்டப்படி ஒரு பிறப்பையோ இறப்பையோ உடனடியாக பதிவு செய்ய வேண்டும் என்றும் காலம் சென்ற பிறகு நீதிமன்ற உத்தரவின் மூலமே பதிவு செய்ய முடியும் என்றால் அந்தோணியின் இறப்பானது 1976 ம் ஆண்டு ஆகும் அப்போது அவ்வாறான சட்டங்கள் எதுவும் இல்லை. நான் வழக்கில் பதிவு செய்துள்ள வா.சா.ஆ.2 இறப்பு சான்றிதழில் அரசாங்க முத்திரை இடம் பெற்றுள்ளதா என்றால் மேற்படி ஆவணத்தின்அசல் ஆனது தேவகோட்டை நீதிமன்றத்தில் உள்ளது அந் த அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள நகலானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் அரசாங்க அதிகாரியின் கையொப்பம் உள்ளது முத்திரை எதுவும் இல்லை.

6. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் நீதிமன்ற உத்தரவு மூலம் பதிவு செய்யப்பட்ட குறிப்பு எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணம் 07.06.2015 ல் பதியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 1976 ம் ஆண்டு இறந்த நபருக்கு 2015 ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவு இன்றி இறப்பை பதிவு செய்ய இயலாது என்றும் மேற்படி வா.சா.ஆ.2 ஆவணமானது நான் வழக்கிற்காக உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சாஆ.2 ஆவணமானது முறையாக பிறப்பு, இறப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருந்தால் எத்தனை நகல்கள் வேண்டுமானாலும் அதற்கு பெற்றுக் கொள்ளலாம் என்றும் நான் உற்பத்தி செய்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளதால் தான் அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு நகலை குறியீடு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. வழக்குச் சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் எப்போது பட்டா ஏற்பட்டது என்றால் இவ்வழக்கிற்கு பிறகு தான் 1973 ம் ஆண்டு மேற்படி பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 வரி ரசீது ஆவணங்களில் மூன்று ரசீதுகளில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றும் ஒரு ரசீதில் மட்டும் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே

எண் குறிப்பிடப்பட்டுள்ள அந்த வரிரசீதீல் ஒரு சர்வே எண் மட்டும தான் குறிப்பிடபட்டுள்ளது என்றும் பிற சர்வே எண்கள் குறிப்பிடபடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ள அந்த ஒரு சர்வே எண் தான் வழக்குச் சொத்தாகும். 25.04.1980 ம் தேதியிட்ட வா.சா.ஆ.6 வரி ரசீதில் 5 ம் நம்பர் பட்டாவிற்கு தான் ரசீது ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 1973 ம் ஆண்டு மேற்படி இவ்வழக்கின் 1 ம் பிரதிவாதி பெயரில் வழக்குச் சொத்தை பொறுத்து பட்டா ஏற்பட்டு விட்டது என்றும் அதனால் நான் வழக்கிற்காக பட்டா நம்பர் 5 ல் வழக்குச் சொத்தில் கட்டுப்பட்டுள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.6 ஆவணங்களில் 25.04.1980 ம் தேதியிட்ட ஆவணத்தை தவிரமீதமுள்ள 3 ஆவணங்களும் 1 ம் வாதி செல்லம்மாளுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான், ஆனால் 1976 ம்ஆண்டு ஏற்பட்ட ரசீது ஆவணம் ஒன்று என்னிடம் உள்ளது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை